# சரக்கு மற்றும் சேவை வரி

## 1. தற்போதைய வரி செலுத்துவோர் என்பவர் யார் ?

கீழ்கண்ட ஏதேனும் சட்டத்தின் கீழ் பதிவு பெற்று வரி செலுத்தி வரும் அனைவரும் தற்போதைய வரி செலுத்துவோர்.

அ. மத்திய கலால் வரி

ஆ. சேவை வரி

இ. மாநில விற்பனை வரி / மதிப்புக்கூட்டு வரி (பிரத்யேக மதுபான வணிகர்கள் தவிர)

ஈ. நுழைவு வரி

உ. சொகுசு வரி

ஊ. கேளிக்கை வரி (உள்ளாட்சி அமைப்புகளில் வரி செலுத்துவோர் தவிர)

## 2. சரக்கு மற்றும் சேவை வரி (GST) வலைதளத்தில் சேர்க்கை (Enrolment) என்பதன் பொருள் என்ன ?

சரக்கு மற்றும் சேவை வரி வலைதளத்தில் சேர்க்கை என்பது தற்போதுள்ள வரி செலுத்துவோர் விவரங்களை அவ்வலைதளத்தில் வணிகர்களின் தகவல்களை சரி பார்த்தல் மற்றும் விடுபட்ட முக்கிய தகவல்களை பூர்த்தி செய்வதாகும்.

## 3. நான் சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பில் சேர வேண்டுமா ?

முதல் பதிலில் கூறப்பட்டுள்ள சட்டங்களில் பதிவு பெற்றுள்ள அனைத்து வரி செலுத்துவோரும் சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பிற்கு மாற்றம் செய்யப்படுவர். தற்போதைய வணிகர் விவரங்களை சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பில் சேர்ப்பதன் மூலம் சரக்கு மற்றும் சேவை வரி முறைக்கு மாறுவது எளிதாகும். பல்வேறு வரி அமைப்புகளில் உள்ள விவரங்கள் முழுமையானதாக இல்லாததால் புதியதாக சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் இதனால் சரக்கு மற்றும் சேவை வரி விவர தொகுப்பில் திருத்தங்கள் அதிகம் தேவைபடாத முழுமையான விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

## 4. நான் ஏன் சரக்கு மற்றும் சேவை வரி வலைதளத்தில் ஒரு பயனாளியாக சேர வேண்டும் ?

சரக்கு மற்றும் சேவை வரி அமுல்படுத்தப்பட்ட பிறகு சரக்கு மற்றும் சேவை வரிக்கு இணக்கமான நமூனாக்கள் சமர்ப்பித்தல், வரி செலுத்துகை ஆகிய தேவைகளுக்கு தாங்கள் இந்த வலைதளத்தில் சேர்க்கை பெற கோரிக்கை அளிப்பது அவசியமாகிறது.

**5. நான் எப்போது சரக்கு மற்றும் சேவை வரி வலைதளத்தில் சேர்க்கை பெற வேண்டும் ?**

முதல் பதிலில் கூறப்பட்டுள்ள சட்டங்களில் பதிவு பெற்றுள்ள அனைத்து வரி செலுத்துவோரும் சரக்கு மற்றும் சேவை வரி வலைதளத்தில் சேர்க்கப்பட வேண்டும். சரக்கு மற்றும் சேவை வரி வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தின்படி மாநில மதிப்புக்கூட்டு வரி மற்றும் மத்திய கலால் ஆகியவை அக்டோபர் 2016 முதல் புதிய சேர்க்கைகளை தொடங்கும், சேவை வரி செலுத்துவோர்களுக்கான சேர்க்கை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**6. சரக்கு மற்றும் சேவை வரி இணைதளத்தில் தாமாகவே இணைத்துக் கொண்டதாக கருதப்பட வாய்ப்பு உள்ளதா ?**

இல்லை. தாமாகவே இணைத்துக் கொண்டதாக கருதப்பட மாட்டாது. கேள்வி 1–க்கான பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ் பதிவு பெற்று நடைமுறையிலுள்ள அனைத்து வரி செலுத்துவோரும் சரக்கு மற்றும் சேவை வரி இணையத்தின் வாயிலாக தாங்களாகவே முன்வந்து இணைத்துக் கொள்ள வேண்டும்.

**7. சரக்கு மற்றும் சேவை வரி இணையத்தில் இணைவதற்கு ஏதேனும் கட்டணம் / தொகை வசூலிக்கப்படுகிறதா ?**

இல்லை. சரக்கு மற்றும் சேவை வரி இணையத்தில் இணைவதற்கு ஏதும் கட்டணம் / தொகை இல்லை.

**8. மத்திய / மாநில / யூனியன் பிரதேசங்கள் வரிச்சட்டங்களின் கீழ் பதிவு பெற்று வரி செலுத்துவோருக்கு இணைவதற்கான வழிமுறைகளில் வித்தியாசம் உண்டா ?**

இல்லை. மத்திய / மாநில / யூனியன் பிரதேசங்கள் வரிச்சட்டங்களின் கீழ் பதிவு பெற்று வரி செலுத்துவோருக்கு இணைவதற்கான வழிமுறை பொதுவானது.

**9. வரி செலுத்துவோர்கள், சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் மத்திய மற்றும் மாநில வரி நிர்வாகங்களுக்கு தனித்தனியாக இணைய வேண்டுமா ?**

இல்லை. சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின் கீழ் இணைய விரும்புவோர், சரக்கு மற்றும் சேவை வரி இணையத்தில் விண்ணப்பிக்க வேண்டும். GST–ன் இணைவதென்பது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குப் பொதுவானது. மத்திய GST / மற்றும் மாநில GST ஆகிய இரண்டிற்கும் பதிவு, நமூனா மற்றும் வரி செலுத்துச் சீட்டு ஆகியவை பொதுவானது.

**10. தற்காலிக அடையாள எண்ணின் வடிவம் யாது ?**

22 AAAAA0000A 1 Z 5

| | |
|---|---|
| 22 | மாநில அடையாளம் |
| AAAAA0000A | நிரந்தர கணக்கு எண் |
| 1 | ஒரே நிரந்தர கணக்கு எண்ணின் கீழ் உள்ள வர்த்தகங்களின் எண்ணிக்கை |
| Z | இயல்பாக வழங்கப்படும் எழுத்து |
| 5 | சரிபார்க்கும் எண் |

**11. சரக்கு மற்றும் சேவை வரியில் பதிவு செய்ய தொடங்கும் முன் என்னிடம் தயாராக இருக்க வேண்டிய விவரங்கள் எவை ?**

சரக்கு மற்றும் சேவை வரி வலைதளத்தில் பதிவு செய்ய தொடங்குமுன், கீழ்க்கண்ட குறிப்புகள் / ஆவணங்கள் தங்களிடம் இருக்க வேண்டியவை

1. மத்திய / மாநில நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்ட தற்காலிக அடையாள எண்
2. மத்திய / மாநில நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்ட கடவுச்சொல்
3. சரியான மின் அஞ்சல் முகவரி
4. சரியான கைபேசி எண்
5. வங்கிக் கணக்கு எண்
6. வங்கியின் IFSC குறிஞட

ஆவணங்கள்

அ. வணிக நிர்வாக அமைப்புக்கான சான்றுகள் (Constitution)

1. பங்குதாரர் அமைப்பு எனில் அதற்கான பங்குதாரர் கூட்டமைப்பு பத்திரம் (PDF அல்லது JPEG வடிவத்தில் அதிகப்பட்ச அளவாக 1 MB)
2. பிற அமைப்புகளுக்கு வணிகத்தின் பதிவுச் சான்றின் நகல் (PDF அல்லது JPEG வடிவத்தில் அதிகப்பட்ச அளவாக 1 MB )

ஆ. வணிகம் செய்பவர் / பங்குதாரர் / பிரியாத இந்து குடும்பத் தலைவர் ஆகியவர்களின் புகைப்படம் (JPEG வடிவத்தில் அதிகபட்ச அளவாக 100 KB)

இ. கையொப்பமிட அனுமதிக்கப்பட்டவருக்கான சான்று (PDF மற்றும் JPEG வடிவத்தில் அதிகப்பட்ச அளவாக 1 MB)

ஈ. கையொப்பமிட அனுமதிக்கப்பட்டவரின் புகைப்படம் (JPEG வடிவத்தில் அதிகபட்ச அளவாக 100 KB)

உ. வங்கிக் கணக்கு புத்தகத்தின் முகப்புப் பக்கம் / வங்கிக் கணக்கு அறிக்கை (கணக்கு எண், வங்கி கிளையின் விலாசம், கணக்கு வைத்திருப்பவரின் விலாசம் மற்றும் சில பரிவர்த்தனை விவரங்களுடன்)

**12. முதன் முறை உள்நுழையும் போது எந்த பயனாளர் பெயர் தரவேண்டும். மாநில பதிவின் போது பயன்படுத்திய பயனாளர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை நான் பயன்படுத்தலாமா ?**

முதல் முறை உள்நுழையும் போது மாநில மதிப்புக் கூட்டு வரி / மத்திய வரித் துறையினிடமிருந்து பெறப்பட்ட தற்காலிக பயனாளர் பெயர் மற்றும் கடவுச் சொல் (Provisional id and password) தரவேண்டும். அடுத்தடுத்து உள் நுழையும் போது GST வரித்தள இணையத்தில் தங்களால் உருவாக்கப்பட்ட பயனாளர் பெயர் மற்றும் கடவுச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

**13. முதன் முறை உள் நுழைந்த பின்னர் எந்த பயனாளர் அடையாளத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் ?**

GST தளத்தில் எவராலும் ஏற்கனவே பயன்படுத்தப்படாத தங்கள் விருப்பத்திற்கிணங்க எந்த பயனாளர் அடையாளத்தையும் பயன்படுத்தலாம்.

**14. GST இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டிய தற்காலிக பயனாளர் பெயர் மற்றும் கடவுச் சொல் (Provisional id and password) என்னால் பெறப்படவில்லை. தற்போது நான் என்ன செய்ய வேண்டும் ?**

தற்காலிக பயனாளர் பெயர் மற்றும் கடவுச் சொல் பெறப்படாதவர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட மாநில / மத்திய அதிகாரிகளை அணுகவும்.

**15. GST இணைய தளத்தில் பதிவு செய்யும் பொழுது எனது வரி ஆலோசகரின் அஞ்சல் முகவரி மற்றும் கைபேசி என்னை நான் பயன்படுத்தலாமா ?**

இல்லை. வரி ஆலோசகர் அல்லது பிறரின் மின் அஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணை பயன்படுத்தக் கூடாது. கட்டாயமாக தங்களது அல்லது தங்களால் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்டவரின் மின் அஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணை மட்டுமே அளிக்க வேண்டும். GST இணைய தளத்தில் பதிவு செய்த மின் அஞ்சல் முகவரி மற்றும் கைபேசி வாயிலாக மட்டுமே எதிர்காலத்தில் பரிவர்த்னை / தொடர்பு கொள்ளப்படும்.

வரி ஆலோசகர்களுக்கென தனியாக பயனாளர் அடையாளம் மற்றும் கடவுச்

சொல் GST இணைய தளத்தில் வழங்கப்படும். அதற்காக அவர்களது சொந்த மின் அஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணை அளிப்பார்கள்.

### 16. யார் அங்கீகரிக்கப்பட்ட முதன்மை கையொப்பராக இருப்பார் ?

GST இணைய தளத்தில், வரி செலுத்துவோர் சார்பாக முதன்மை பொறுப்பாளராக இருப்பவரே அங்கீகரிக்கப்பட்ட முதன்மை கையொப்பராவார். GST இணைய தளத்திலிருந்து வரி செலுத்துவோர் சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களும் அவருக்கு அனுப்பப்படும்.

உதாரணமாக –

உரிமையாளர் எனில் – உரிமையாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவர்,

பங்குதாரர் அமைப்பு எனில் – ஏதேனும் ஒரு பங்குதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒருவர்

நிறுவனம் / எல்எல்ப்பி, சங்கம், டிரஸ்ட் எனில் – தங்களது நிர்வாகத்தின் ஆளுமை குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவர்

ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட முதன்மை கையொப்பராக இயங்கலாம். அங்கீகாரத்தின் நகலை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஒரு வணிகத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கையொப்பர் இருப்பின் ஒருவரை அங்கீகரிக்கப்பட்டவராக கருதப்பட்டு அவரது மின் அஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணை பதிவின் போது அளிக்கப்பட வேண்டும். வணிகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பர் ஒருவரே எனில், அவரே அவ்வணிகத்தின் முதன்மை அங்கீகரிக்கப்பட்ட கையொப்பராக கருதப்படுவர்.

### 17. ‘ஒருமுறை கடவுச் சொல்’ (One Time Password [OTP]) எவ்வளவு நேரம் மதிப்புடையதாயிருக்கும் ?

தங்களது மின் அஞ்சல் மற்றும் கைபேசிக்கு ‘ஒருமுறை கடவுச் சொல்’ பெறப்பட்டதற்கு பிறகு 15 நிமிடங்கள் மட்டுமே மதிப்புடையதாக இருக்கும். 15 நிமிடங்களுக்குப் பிறகு கடவுச் சொல் காலாவதியாகிவிடும்.

### 18. நான் எனது கைபேசியில் ‘ஒருமுறை கடவுச் சொல்’ பெறவில்லை. தற்போது நான் என்ன செய்ய வேண்டும் ?

GST இணையத்தில் தாங்கள் பதிவு செய்த கைபேசி எண் மற்றும் மின் அஞ்சல்

முகவரிக்கு 'ஒருமுறை கடவுச் சொல்' வழங்கப்பட்டுவிடும். 15 நிமிடங்களுக்குள் கடவுச் சொல் பெறப்படாவிடின், மீண்டும் பெற 'Resend OTP' பொத்தானை தட்டவும்.

## 19. 'Resend OTP' பொத்தானை தட்டிய பிறகும் 'ஒருமுறைக் கடவுச்சொல்' பெறப்படாவிடின் நான் என்ன செய்ய வேண்டும்?

'Resend OTP' பொத்தானை தட்டிய பிறகும் கைபேசியில் 'ஒருமுறைக் கடவுச் சொல்' பெறப்படாவிடின், பதிவு செய்த தங்களது கைபேசி எண்ணை சரிபார்க்கவும்.

'Resend OTP' பொத்தானை தட்டிய பிறகும் மின் அஞ்சல் முகவரிக்கு ஒருமுறைக் கடவுச் சொல் பெறப்படாவிடின், பதிவு செய்த தங்களது மின் அஞ்சல் முகவரி வலையமைப்பு மற்றும் கைபேசி இணைப்பு ஆகியவற்றை சரிபார்க்கவும்.

## 20. 'ஒரு முறைக் கடவுச் சொல்லை' நான் ஏன் மின் அஞ்சல் மற்றும் கைபேசி இரண்டிலும் பெற வேண்டும்?

தனித்தனியே ஒருமுறைக் கடவுச் சொல்லை மின் அஞ்சல் மற்றும் கைபேசியில் அனுப்புவது தங்களது மின் அஞ்சல் மற்றும் கைபேசி விவரங்களை சரிபார்க்கத்தான். எதிர்காலத் தகவல்கள் அனைத்தும் GST இணையத்தில் பதிவு செய்யப்பட்ட மின் அஞ்சல் மற்றும் கைபேசிக்கு மட்டுமே அனுப்பப்படும். எனவே மின் அஞ்சல் மற்றும் கைபேசி தகவல்களை சரிபார்க்க வேண்டியது அவசியமாகிறது.

## 21. 'ஒருமுறை கடவுச் சொல்லை' கைபேசி மூலம் பெற்றதும் அதே கடவுச் சொல்லை மின் அஞ்சல் மற்றும் கைபேசி கடவுச் சொல் சரிபார்க்கும் பக்கத்தில் பதிவிட்டேன். இவ்விரு கடவுச் சொல்லும் வெவ்வேறானதா?

மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணிற்கு இரண்டு வித்தியாசமான 'ஒருமுறை கடவுச் சொல்லை' கண்டிப்பாக பெற்றிருப்பீர்கள். மின்னஞ்சல் மற்றும் கைபேசி 'ஒருமுறை கடவுச்சொல்லிற்காக' தனித்தனியே உள்ள ஒருமுறை கடவுச் சொல்லிற்கான பகுதிகளில் பதிவிடவும். பெறப்பட்ட ஒரே கடவுச் சொல்லை இரு இடங்களிலும் பதிவிட்டால், தங்களது சரிபார்த்தல் தவறாகிவிடும்.

## 22. GST இணையத்தில் எவ்வாறான விவரங்கள் பதிவிடும் விண்ணப்பத்தின் முன்பதிவிடப்பட்டிருக்கும்?

தற்போதுள்ள தங்களின் விவரங்களின் அடிப்படையில் கீழ்காணும் விவரங்கள் தானாகவே பதியப்பட்டிருக்கும்

வணிகத்தின் நிரந்தர கணக்கு எண்
வணிகத்தின் சட்டப்படியான பெயர்
மாநிலம்
பதிவு பெறுவதற்கான காரணம்
GST இணையத்தில் பதிவு செய்த போது அளித்த அங்கீகரிக்கப்பட்ட முதன்மை கையொப்பரின் மின்னஞ்சல் மற்றும் கைபேசி எண்

### 23. பதிவிடும் விண்ணப்பத்தில் பதிய வேண்டிய விவரங்களுக்கு அருகில் உள்ள சிவப்பு நிறக் குறியீடு எதைக் குறிக்கிறது ?

சிவப்பு நிறக் குறியீடு கட்டாயம் பதிய வேண்டிய விவரங்களைக் குறிக்கிறது. விண்ணப்பத்தினைத் தொடர்ந்து பூர்த்தி செய்ய இக்குறியீடு உள்ள விவரங்களைக் கட்டாயம் பதிய வேண்டியது அவசியமாகிறது.

### 24. எனது சட்டப்படியான பெயர், மாநிலத்தின் பெயர் மற்றும் நிரந்தர கணக்கு எண் ஆகியவைகளை நான் மாற்றியமைக்க முடியுமா ?

சட்டப்படியான பெயர், மாநிலத்தின் பெயர் மற்றும் நிரந்தர கணக்கு எண் ஆகியவைகளை மாற்றியமைக்க முடியாது. இத்தகவல் அனைத்தும் தற்போது மாநில அல்லது மத்திய வரிவிதிப்பு அமைப்புகளில் ஏற்கனவே பெறப்பட்டுள்ள விவரங்கள் ஆகும்.

### 25. எனது மாநில நிர்வாக எல்லையைக் கண்டறிவது எவ்வாறு ?

தங்களது மதிப்புக் கூட்டு வரியின் கீழ் பெற்ற பதிவுச் சான்றிதழை பார்க்கவும். தற்போதுள்ள மதிப்புக்கூட்டு வரி பதிவுச் சான்றிதழில் உள்ள அதே எல்லையாகும்.

### 26. எனது வார்டு / வட்டம் / பகுதி எண்ணை எவ்வாறு அறிவது ?

வார்டு / வட்டம் / பகுதி எண்ணை அறிய தங்களது மதிப்புக்கூட்டு வரி பதிவுச் சான்றிதழை பார்க்கவும். எங்கே பதிவு செய்யப்பட்டதோ அதுவே தங்களது வார்டு / வட்டம் / பகுதி ஆகும்.

### 27. எனக்கான மத்திய நிர்வாக எல்லையை அறிவது எவ்வாறு ?

மத்திய கலால் துறையில் பதிவு செய்திருந்தால், மத்திய எல்லையை அறிய பதிவுச் சான்றிதழை பார்க்கவும்.

மதிப்புக் கூட்டு வரியின் கீழ் மட்டுமே பதிவு செய்திருந்தால். தங்களது முதன்மை வணிக இடத்தின் விலாசத்தின் அடிப்படையில் கண்டறிய வேண்டும்.

விவரங்களுக்கு தாங்கள் CBEC-க்குரிய www.cbec.gov.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.
(பார்க்க URL -- http://www.cbec.gov.in/resources/htdocs-cbec/deptt_offcr/cadre-restruct/cadre-restructg-notifications.pdf )

### 28. எந்த ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய இயலவில்லை. ஏன் ?

முதலில் தங்களது இணைப்பினை சரிபார்க்கவும். தங்களது ஆவணங்கள் PDF அல்லது JPEG என்ற வடிவத்தில் 1 MBஅளவுக்குள் இருப்பதை ஊர்ஜிதம் செய்யவும். புகைப்படங்கள் எனில், PDF வடிவத்தில் அதிகபட்ச அளவாக 100 KB இருக்க வேண்டும்.

### 29. படிவத்தினை பூர்த்தி செய்யும் போது வணிக விவர பக்கத்தில் அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்துவிட்டேன். ஆனால் தற்போது அனைத்தும் காலியாக உள்ளது. ஏன் ?

ஒவ்வொரு பக்கத்தையும் பூர்த்தி செய்தபின் பக்கங்களை அவ்வப்போது சேமிக்க வேண்டும். அதுவரை செய்த பதிவுகளை சேமிக்க ‘Save & Continue’ பொத்தானை அழுத்தி பின் பிற விவரங்களை பதிவிடல் வேண்டும்.

### 30. DIN என்றால் என்ன ?

DIN என்பது Corporate Affairs அமைச்சகத்தினால் குழும இயக்குனர்களுக்குக் கொடுக்கப்படும் இயக்குநர் அடையாள எண் ஆகும். தங்களது DIN அறிய Corporate Affairs அமைச்சகத்தினால் வழங்கப்பட்ட கடிதத்தினை பார்க்கவும் அல்லது MCA இணையதளத்தை பார்க்கவும். (www.mca.gov.in)

### 31. ஆதார் எண் என்னிடம் இல்லை. ஆதார் எண் அளிக்க வேண்டியது அவசியமா ?

விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு ஆதார் எண் அவசியமில்லை. இருப்பினும், GST இணையதளத்தில் விண்ணப்பத்தினை இறுதியாக பதிவு செய்யும் போது மின் கையொப்பமிட ஆதார் அவசியமாகிறது.

### 32. முதன்மை வணிக இடம் என்றால் என்ன ?

முதன்மை வணிக இடம் என்பது மாநிலத்திற்குள்ளாக வரி செலுத்துவோரின் வணிகம் செயல்படும் இடமாகும். பொதுவாகவே முதன்மை வணிக இடம் என்பது வணிகத்தின் கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவுகள் வைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் வணிகத்தின் தலைமையகம் அல்லது உயர் நிர்வாகம் உள்ள இடமாகும்.

**33. கூடுதல் வணிக இடம் என்றால் என்ன ?**

கூடுதல் வணிக இடம் என்பது வரி செலுத்துவோரால் முதன்மை வணிகம் தவிர மாநிலத்திலுள்ள மற்ற இடங்களில் வணிக சம்பந்தமான செயல்கள் உள்ள இடங்களாகும்.

**34. HSN மற்றும் SAC குறியீடு என்றால் என்ன ?**

HSN என்பது சரக்குகளை வகைப்படுத்த அனைத்து நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களின் குறியீட்டு முறையாகும்.

SAC மத்திய கலால் மற்றும் சுங்கத் துறையினரால் சேவை வகைகளை அடையாளமிடும் வகையில் குறிக்கப்படும் சேவை கணக்குக் குறியீடு ஆகும்.

**35. GST இணையதளத்தில் பதிவிடும் போது எந்த வங்கிக் கணக்கினை அளிக்க வேண்டும் ?**

GST இணையத்தில் பதிவிடும்போது, வணிகப் பரிவர்தனை செய்வதற்காக உபயோகிக்கப்படும் வங்கிக் கணக்கினை அளிக்க வேண்டும்.

**36. நான் ஒன்றிற்கு மேற்பட்ட வங்கி கணக்கு வைத்துள்ளேன். GST இணையத்தில் பதிவிடும் போது அனைத்து வங்கிக்கணக்கையும் அளிக்கலாமா ?**

GST இணையத்தில் பதிவிம்போது அதிகபட்சமாக 10 வங்கிக் கணக்கு விவரங்களை அளிக்கலாம்.

**37. பதிவிடுவதற்கு DSC கட்டாயமா ?**

நிறுவனங்கள், அந்நிய நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் அந்நிய வரையறுக்கப்பட்ட பங்குதாரர்கள் ஆகியோர் கட்டாயமாக DSC-யுடன் பதிவிட வேண்டும். பிற வரி செலுத்துவோர் விருப்பமிருந்தால் பயன்படுத்தலாம்.

**38. எனது DSC, GST இணையதளத்தில் பதிவு செய்யப்படவில்லை. எனது விண்ணப்பத்தினை DSC-யுடன் சமர்ப்பிக்க முடியுமா ?**

GST இணையதளத்தில் பதிவு செய்யாமல் DSC-யுடன் தங்களது பதிவு விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க இயலாது. ஏனவே தாங்கள் ‘Register your DSC’ என்பதை சொடுக்கி GST இணையதளத்தில் DSC-ஐ பதிவு செய்வது அவசியமாகிறது.

## 39. GST இணையதளத்தில் எவ்வாறு எனது DSC-ஐ பதிவு செய்வது ?

சரியான DSC தங்களிடம் இருப்பின், தாங்கள் GST இணையத்தினுள் சென்று 'Register your DSC' என்ற இணைப்பினை சொடுக்கவும். CBDT-யில் உள்ள நிரந்தர கணக்கு எண்ணும் DSC உடையவருடைய நிரந்தர கணக்கு எண்ணும் சரியாக இருக்க வேண்டும். சரியாக இருந்தால் 'Certificate' இணைப்பினை தேர்வு செய்து பதிவு செய்து கொள்ளலாம். GST இணையதளத்தில் 2 அல்லது 3–ம் வகுப்பு DSC மட்டுமே பதிவு செய்ய முடியும்.

## 40. மின் கையொப்பம் என்றால் என்ன ? அது எவ்வாறு செயல்படுகிறது ?

மின் கையொப்பம் என்பது மின்னனு முறையிலான கையொப்பமாகும். ஆதார் அட்டையுள்ள ஒருவர் ஆவணங்களை மின்னனு முறையிலான கையொப்பமிட வழங்கப்படும் சேவையே மின் கையொப்பமாகும். விண்ணப்பதாரர் மின் கையொப்ப சேவை முறையை தேர்வு செய்தால் கீழ்கண்ட செயல்முறைகள் நடைபெறும்.

வரி செலுத்துவோர் 'E-Sign' என்ற பொத்தானை சொடுக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பாளரின் ஆதார் எண்ணை பதிய வேண்டும்.

1. ஆதார் எண்ணை சரிபார்த்தபின்னர், GST இணையம் UIDAI என்ற தளத்திற்கு 'ஒருமுறை கடவுச் சொல்லை' அனுப்புமாறு குறிப்பு அனுப்பும்.

2. UIDAI அமைப்பானது 'ஒருமுறை கடவுச் சொல்லை' ஆதார் எண்ணில் பதிவு செய்தருந்த மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணிற்கு அனுப்பும். அந்த கடவுச் சொல்லை குறிப்பிட்ட இடத்தில் நிரப்பி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும். அத்துடன் மின் கையொப்ப செயல்முறை முடிவு பெறும்.

## 41. விண்ணப்பத்தை பதிவு செய்து சமர்ப்பிப்பதற்கு ஏதேனும் கட்டணம் உண்டா ?

இல்லை. GST இணையத்தில் பதிவு செய்து சமர்ப்பிப்பதற்கு கட்டணம் ஏதுமில்லை.

## 42. விண்ணப்ப சான்று எண் (ARN) என்றால் என்ன ?

'விண்ணப்ப சான்று எண்' என்பது மின் கையொப்பம் அல்லது டிஜிட்டல் கையொப்பமிட்டு விண்ணப்பத்தினை பதிவு செய்து சமர்ப்பித்த பின் பெறப்படும் சான்று எண் ஆகும். GST இணையத்தில் ஒவ்வொரு பரிவர்த்தனை முடிந்தபின்

அளிக்கப்படும் தனித்த எண்ணாகும். GST இணையத்தில் எதிர்கால தொடர்புகளுக்கு பயன்படும் என்பதால் இந்த எண்ணை குறித்து வைத்துக் கொள்ளவும்.

43. ‘விண்ணப்ப சான்று எண்ணின்’ அமைப்பு யாது ?

விண்ணப்ப சான்று எண்ணின் அமைப்பு

| AA | 07 | 07 | 16 | 000000 | 1 |
|---|---|---|---|---|---|
| தலைப்பெழுத்து | மாநிலக் குறியீடு | மாதம் | ஆண்டு | தளம் உருவாக்கிய குறியீடு | சரிபார்க்கும் எண் |

**44. நான் மத்திய கலால் / சேவை வரி மற்றும் மதிப்புக்கூட்டு வரி சட்டங்களின் கீழ் பதிவு பெற்று நடைமுறையிலுள்ள வரிசெலுத்துபவன். மாதிரி சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தி படி GST இணையத்தில் கேட்கப்பட்ட விவரங்களை வெற்றிகரமாக சமர்ப்பித்து விட்டேன். அடுத்தது என்ன நடக்கும் ?**

வெற்றிகரமாக விண்ணப்பத்தினை GST இணையத்தில் சமர்ப்பித்தபின் ‘விண்ணப்ப சான்று எண்’ (ARN ) உருவாக்கப்படும். விண்ணப்பத்தின் நிலை குறித்து அறிவதற்கு இந்த விண்ணப்ப சான்று எண்ணை பயன்படுத்தலாம்.

**45. ‘விண்ணப்ப சான்று எண்ணை’ (ARN) நான் பெறவில்லை. தற்போது நான் என்ன செய்ய வேண்டும் ?**

பதினைந்து மணித்துளிகளுக்குள் ‘விண்ணப்ப சான்று எண்ணை’ தாங்கள் பெறாவிட்டால், அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கான விரிவான அறிவுரைகள் தங்களது மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும்.

**46. விவரங்களை பதிவிடும் போது, இணையதளத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. சேமித்த பதிவு விண்ணப்பத்தினை எவ்வாறு திரும்பப் பெறுவது ?**

சேமித்த பதிவு விண்ணப்பத்தினை திரும்பப் பெறுவதற்கு, சரியான குறிப்புகளுடன் GST இணையத்தில் உள்நுழையவும். ‘Dashboard’ பகுதியில் ‘My Saved Application’ என்பதில் ‘Edit’ என்ற பொத்தானை சொடுக்கி சேமித்த விண்ணப்ப படிவத்தினை திரும்பப் பெறலாம்.

**47. நிரந்தர கணக்கு எண் விவரங்கள் பொருந்தவில்லை என்ற மின்னஞ்சலை நான் பெற்றுள்ளேன். தற்போது நான் என்ன செய்ய வேண்டும் ?**

தாங்கள் GST இணையத்தில் உள் நுழையவும். மேலும் தங்களது நிரந்தர கணக்கு எண் விவரங்களை பதிவு செய்து பதிவு விண்ணப்பத்தினை மீள சமர்ப்பிக்கவும்.

**48. எனது டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ் காலாவதியாகிவிட்டது / மீட்க இயலவில்லை ? தற்போது நான் என்ன செய்ய வேண்டும் ?**

GST இணையதளத்தில் தங்களது சரியான டிஜிட்டல் கையொப்ப சான்றிதழை மீள சமர்ப்பிக்கவேண்டும். சரியான குறிப்புகளுடன் GST இணையதளத்தில் உள் நுழையவும். 'Dashboard' பகுதியில் 'Register/update DSC' என்ற இணைப்புக்கு செல்லவும். மீட்க இயலவில்லை எனில் மற்றுமொரு டிஜிட்டல் கையொப்ப சான்றிதழை GST இணையதளத்தில் பதிவு செய்யவும்.

**49. ஏதேனும் உதவி மேசை வசதி உள்ளதா ?**

ஆம். உதவி மேசை வசதி உருவாக்கப்படும். அதன் விவரங்கள் GST இணைய தளத்தில் வெளியிடப்படும்.

**50. பதிவு செய்வதற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படுமா ?**

ஆம். மின்–கையொப்பம் அல்லது டிஜிட்டல் கையொப்ப சான்றிதழுடன் சரியில்லாத ஆவணங்கள் அல்லது பொய்யான அல்லது தவறான பதிவேற்றம் / தவறான விவரம் இருப்பின், பதிவான விண்ணப்பம் நிராகரிக்கப்படும். எனினும் வரி செலுத்தும் விண்ணப்பதாரர் அவர் / அவள் எண்ணங்களை தெளிவுபடுத்த அவகாசம் அளிக்கப்படும்.

**51. பதிவு விண்ணப்பத்தினை சமர்ப்பித்தபின் விவரங்களை திருத்த முடியுமா ?**

GST நடைமுறைப்படுத்தப்படும் நாளுக்கு பிறகு தாங்கள் பதிவு செய்த விண்ணப்பத்தினில் விவரங்களை திருத்த முடியும்.

**52. பதிவு செய்த போது அளித்த கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றிக் கொள்ள முடியுமா ?**

தாங்கள் அளித்த கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை GST நடைமுறைப்படுத்தப்படும் நாளிலிருந்து திருத்தங்கள் மூலம் மாற்றிக் கொள்ள முடியும்.

**53. தற்காலிக பதிவுச் சான்றிதழை நான் எப்போது பெறுவேன் ?**

விண்ணப்பப் பதிவினை சரியாக வெற்றிகரமாக முடித்திருந்தால், GST நடைமுறைப்படுத்தப்படும் நாளுக்கு பிறகு 'Dashboard' பகுதியில் அதனை

பெற்றுக் கொள்ளலாம்.

### 54. இறுதியான பதிவுச் சான்றிதழை நான் எப்பொழுது பெறுவேன் ?

GST நடைமுறைப்படுத்தப்படும் நாளிலிருந்து 6 மாதத்திற்குள் அவரவர் எல்லைக்குள் அமைந்துள்ள மத்திய / மாநில அரசின் தகுந்த அலுவலரால் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு இறுதியான பதிவுச் சான்றிதழ் அளிக்கப்படும்.

### 55. எனக்கு ஒரே நிரந்தரக் கணக்கு எண்ணின் கீழ் ஒரே மாநிலத்தில் பலவகையான வணிகம் உள்ளது. ஒவ்வொரு வணிகத்திற்கும் தனித்தனியாக பதிவு செய்ய வேண்டுமா ?

ஒரு மாநிலத்தில் ஒரு நிரந்தர கணக்கு எண் வாயிலாக ஒரு GST பதிவினை மட்டுமே செய்ய இயலும் என்பதனால் தாங்கள் ஒரு வணிக விவரத்தினை முதலில் பதிவு செய்யவும். அந்த மாநிலத்தில் உள்ள மீதமுள்ள வணிகங்களுக்கு தங்களது எல்லைக்குட்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளவும்.

### 56. ISD பதிவு என்றால் என்ன ?

உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் (Input Service Distributor) என்பதன் சுருக்கமே ISD ஆகும். சேவைகளின் வரிவிவரப்பட்டியல் மூலம் தலைமை அலுவலகத்தில் பெறப்பட்ட சேவைகளின் மீதான உள்ளீட்டு வரவை கிளை அலுவலகங்களுக்கு விநியோகிப்பவரே உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் ஆவார். இங்கே வரிவிவரப் பட்டியல் என்பது மாதிரி GST சட்டத்தின் பிரிவு 23–ன் கீழ் வழங்கப்பட்ட வரிவிவரப் பட்டியல் ஆகும். தாங்கள் நடைமுறையிலுள்ள உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் என்றால், தங்களுக்கு தேவையான மாநிலத்தின் GST இணையதளத்தில் புதிதாக பதிவு செய்து கொள்ள வேண்டும். அதற்காக தாங்கள் மத்திய நிர்வாக எல்லைக்குட்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.